முற்பகல் 11.10

டாக்டர் மு. சீனியம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவினாசி தொகுதியில் இருந்தபோதிலும்கூட, அன்னூர் பகுதி மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தினால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதைப்போல, அந்த ஆலைகளை அன்னூர் பகுதிக்கு மாற்றிக் கொடுத்து அங்குள்ள பெண்களும், நம்முடைய தமிழக முதல்வருடைய ஆட்சியில் சமபங்காக வேலை பார்ப்பதற்கு தகுதியுள்ள இடத்தை தேர்வு செய்து அமைத்துக் கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பி. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னூர் பகுதியில் வேண்டுமென்றால் புதிதாக அமைக்கலாமே தவிர, வேறு பகுதியில் இருக்கும் நூற்பு மையங்களை மாற்றியமைப்பதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால் இந்த நூற்பு மையங்கள் கிட்டத்தட்ட சுமார் 2 இலட்சம் செலவிலே கட்டப்படுகிறது. எனவே மாற்றி அமைக்கும்பொழுது அந்தக் கட்டிடம் பயனில்லாமல் போய்விடும். எனவே தேவையைக் கருதி, வரும் ஆண்டுகளில் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

117–

திருத்தணி நகருக்கு புதிய பேருந்து நிலையம் ஏற்படுத்துதல்.

***10466–திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு:** மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா--

திருத்தணி நகரியத்தில் தற்போது உள்ள பேருந்து நிலையம் போதுமானதாக இல்லாததால் தற்போது தேர்வு செய்யப்பட்டுள்ள புதிய இடத்தில் பணி துவங்கிட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி, உள்ளாட்சித்துறை அமைச்சர்:

ஆம்.